**தலைப்பு 328 – மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும், அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 30 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும், நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் , மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள் , செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச்செல்வதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு, அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஓட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ, கூட்டாகவோ தாக்கமளிப்பதால், பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு, பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தை இனங்காணும் போதும், மதிப்பீட்டின்போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச்செய்தல், மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும்போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் , சம்பவங்கள் பொருத்தமாகவும், நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் சென்ற ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) கடந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 26 ஆந் திகதிய அரச கணக்கு வழிகாட்டல் இலக்கம் 2021/03 சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் CIGAS இணையப் பயன்பாட்டு முறைமையிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட SA21 படிவத்தில் தயாரிக்கப்பட்ட இறுதி திறைசேரி பரீட்சை மீதியினை சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 திசெம்பர் மாதத்திற்கான பரீட்சை மீதியினை நிதிக்கூற்றில் முன்வைக்கப்பட்டிருந்தது. | CIGAS டெக்ஸ்டொப் பயன்பாட்டின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட வருட இறுதிக்கான பரீட்சை மீதியினை நிதிக்கூற்றில் இணைந்துள்ளதனை அறியத் தருகின்றேன். | அரச கணக்கு வழிகாட்டல் இலக்கம் 2021/03 சுற்றறிக்கையின் படி நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) | வழிகாட்டல் இலக்கம் 2021/03 இல் 7.2 பந்தியில் பதிவிடு நிறுவனத்தினால் ஏனைய வருமானங்களினை | வழிகாட்டல் இலக்கம் 2021/03 இல் 7.2 பந்தியின் படி ஏனைய வருமானங்களினை | அரச கணக்கு வழிகாட்டல் இலக்கம் 2021/03 சுற்றறிக்கையின் |

| | | |
|---|---|---|
| கணக்கீட்டு உத்தியோகத்தர் சரியாக அறவிடப்படும் வருமானத்தினை கட்டுநிதி இணக்கக்கூற்றினுள் சீராக்கல் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் சென்ற வருட ஒப்பீட்டு எண்ணிக்கையினையும் அதற்கமைய காட்டப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும், மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுநிதி இணக்கக்கூற்றில் ஏனைய வருமான தலைப்புக்கள் சார்பாக மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களத்தினால் அறவிடப்பட்ட வருமானமாக ரூபா 21,482,750 காட்டப்பட்டிருந்த போதிலும் சென்ற வருட ஒப்பீட்டு எண்ணிக்கைகளின் தகவல்களை காட்டப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு உத்தியோகத்தர் சார்பாக எமது திணைக்களத்தினால் அறவிடப்பட்ட வருமானமான ரூபா 21,482,750 பெறுமதியினை நிதி செயலாற்றல் கூற்றில் உட்படுத்தப்படாததுடன் அதனை கட்டுநிதி விளக்கக்கூற்றில் கழித்தலின் கீழ் உட்படுத்தப்பட்டுள்ளதாக மேலும் அறியத் தருகின்றேன். அவ்வாறே 2020 ஆம் ஆண்டிற்காக ஒப்பீட்டு எண்ணிக்கைகளினை சீராக்கப்பட்டு நிதிச் செயலாற்றல் கூற்றில் 2020 மீள்சீராக்கப்பட்ட பக்க விலக்கில் உட்படுத்தப்பட்டுள்ளதனை அறியத்தருகின்றேன். | படி நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. |

**1.6.2 நிதி நிலைமை மீதான கூற்று**

**1.6.2.1 நிதியல்லா சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மனிதவலு திணைக்களத்தில் சொத்தாக கணக்கிலிடப்பட்டிருந்த, தொழிற் திணைக்களத்திற்கு சொந்தமான ரூபா 4,700,000 ஆன கெப் வாகனத்தினை மீண்டும் தொழிற் திணைக்களத்திடம் விடுவிக்கும் போது நிதிச் சொத்துக்களிலிருந்து கழிக்கப்படுவதாக காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் அதனை தள்ளுபடியாக காட்டப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. | சொத்துக்கள் பிழையின்றி கணக்கிலிடப்பட வேண்டும். |

2. நிதி மீளாய்வு

2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 06 மூலதன செலவின விடயங்கள் மற்றும் 04 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக மிகை ஒதுக்கீடு பெற்றுகன் கொடுக்கப்பட்டிருந்தமையினால் ஒதுக்கீட்டினை பாவனை செய்ததன் பின்னர் சேமிக்கப்பட்டிருந்த ரூபா 32,850,307 அந்த செலவின விடயங்களுக்கான தேறிய ஒதுக்கீட்டில் நூற்றுக்கு 25 முதல் நூற்றுக்கு 100 வரையிலான இடைவெளியில் காணப்பட்டது. | உள்ளக சுற்றறிக்கை 07/2021 பிரகாரம் நிறுவனத்தின் செலவினங்களை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதற்கமைய, உரிய அங்கீகாரத்தின் கீழ் ஒதுக்கீடுகள் பெறப்பட்டிருந்தாலும் அதுவரையிலும் ஆரம்பிக்கப்படாத வேலைத்திட்டங்கள், கொள்வனவுகள் மேம்படுத்தல்கள் கொடுப்பனவுகள் மற்றும் நிவாரண உதவிகள் நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆகையினால், எங்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள செலவின விடயங்களின் ஒதுக்கீடுகள் சேமிக்கப்பட்டு திறைசேரிக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று நாட்டில் நிலவிய கொவிட் 19 தொற்றின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட செலவினங்கள் ஏற்படவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச கணக்குகள் வழிகாட்டல் இலக்கம் 2021/02 மற்றும் 2021 ஒக்தோபர் 26 ஆந் திகதிய சுற்றுநிருபத்தின் 3.5 பந்தியின் படி 2021 வருடத்தினுள் ஏதாவது ஒரு திணைக்களத்தினால் வேறொரு அரச அல்லது தனியார் நிறுவனத்திடமிருந்து பொருட்கள் அல்லது சேவையினை பெற்றுக்கொண்டு இருப்பின் அது தொடர்பான பற்றுச்சீட்டுக்கள் 2021 திசெம்பர் 31 திகதி அல்லது அதற்கு முன்னர் தீர்க்கப்பட்டு கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக 28 சந்தர்ப்பங்களில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ரூபா 4,563,252 பொறுப்புக்கள் சம்பந்தப்பட்ட சுற்றுநிருப ஆலோசனைப்படி கணக்கிலிடப்படுவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப் படாமையினை அவதானிக்கப்பட்டது. | அரச கணக்குகள் வழிகாட்டல் இலக்கம் 2021/02 மற்றும் 2021/10/26 ஆந் திகதிய சுற்றுநிருபத்தின் 3.5 பந்தியின் படி 2021 வருடத்தினுள் பெற்றுக் கொள்ளப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகள் சம்பந்தப்பட்ட மற்றும் சீட்டுக்கள் கணக்கிலிடப்பட்டு தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் ஒதுக்கீடுகளின் அளவினை போதுமானதாக இல்லாதிருந்தமை மற்றும் கட்டுநிதியினை போதுமானதாக இல்லாதிருந்தமை அல்லது தாமதிக்கப்பட்டு வவுச்சர் பத்திரங்கள் கிடைத்தமையினால் வருடத்திற்குரிய பற்றுச்சீட்டுக்களுக்கான செலுத்துதல்கள் அடுத்த வருடம் மேற்கொள்ளப்பட்டது. | பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளும் போது நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக செயற்பட வேண்டும். |

**2.3 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்த்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 371(5) படி அலுவலினை செய்து முடித்ததும் பெற்றுக் கொள்ளப்பட்ட குற்றமுவல் உபகட்டுநிதியினை தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் 04 உத்தியோகத்தர் களுக்கு 13 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த கட்டுநிதியினை தீர்த்து முடிப்பதற்கு | இதற்குப் பின்னர் இதுபோன்று தாமதங்கள் ஏற்படாதிருக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு விடயப்பொறுப்பு அதிகாரி அறிவுறுத்தப்பட்டுள்ளார். | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |

17 நாள் முதற்கொண்டு 165 நாள் வரையிலான காலதாமதம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களும் அவதானிக்க கூடியதாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த விளைவுமட்டத்தினை அடைந்து கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தொழிற்கூட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான கொரியக் குடியரசின் வேலைவாய்ப்புக்கள் மற்றும் தொழில் அமைச்சினால் கொரிய இலங்கை கொள்கை ரீதியிலான ஆலோசனை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் தொடர்புடைய நீள் நிகழ்ச்சித் திட்டத்தினை சேவையில் ஈடுபடுத்தும் கொள்கைகள் மற்றும் உழைப்பினை சார் சந்தையினை சுறுசுறுப்பூட்டி செயற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள், மக்களுக்கான தொழிற்சேவைகளினை ஒழுங்கு செய்தல், கட்டமைப்பு மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் மீதான பயன்தரும் முறைமைகளினை பரிமாறிக் கொள்ளல் ஆகிய அடிப்படையில் 2017 வருடம் முதல் செயற்பட்டிருந்தது. அதன்படி 2020 யூன் 23 ஆந் திகதி இலங்கையில் பொதுமக்களுக்காக தொழில்வாய்ப்பு சேவையினை உயர்த்துவதற்காக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு அபிவிருத்தினைக்கு தொடர்புடைய | இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக எவ்வித செயற்பாடுகளும் 2021 வருடம் நடைபெறவில்லை. 2022/02/23 ஆந் திகதி மெய்நிகர்வழி ஊடாக மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புக்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் கொரிய அரசுடன் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் போது கொரிய அரசு இதனை முன்னெடுத்துச் செல்வதற்கான திட்டத்தினை முன்வைப்பதற்கான இணக்கப்பாட்டினை தெரிவித்ததுடன் அந்நிகழ்ச்சித் திட்டத்தினை பற்றி கல்ந்துரையாடினோம். 2022/03/23 திகதி இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் தற்போதைய நிலைமை மற்றும் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் தொடர்பாக மேற்கொண்டும் அமைச்சுடன் கலந்துரையாடியதுடன் இந்நிகழ்ச்சித் திட்டத்தினை பொருத்தப்பாடு தொடர்பாக மொறட்டுவை பல்கலைக்கழகம் ஊடாக அறிக்கை ஒன்றினை | எதிர்பார்க்கப்படும் குறிக்கோளினை அடையக் கூடிய வகையில் மற்றும் செயலாற்றலினை ஆகக்கூடியதாக பெற்றுக் கொள்ளும் வகையில் நிகழ்ச்சித் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | நிகழ்ச்சித்திட்ட எண்ணக்கரு பத்திரத்தினை மதிப்பீடு செய்வதற்காக 2020 நவம்பர் 18 ஆந் திகதி தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் இணக்கப்பாட்டினை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. கொரோனா தொற்று காரணமாக இந்நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக எவ்வித செயற்பாடுகளும் 2021 வருடம் மேற்கொள்ளப்படா மையினால் இந்நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக முன்னேற்றத்தினையும் ஈட்டிக் கொள்ளப்படாமையினை அவதானிக்கப்பட்டது. | பெற்றுக் கொள்வதற்கு பிரேரிக்கப்பட்டதுடன் கொரிய அரசு மேற்கொண்டு தகவல்களை பெற்றுத் தருவதற்கும் இணக்கம் தெரிவித்தது. | |
| (ஆ) | உழைப்பு சார்ந்த சந்தை தகவல்களுக்கான முகாமைத்துவ தகவல் முறைமையொன்றினை தாபிப்பது தொடர்பாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக மென்பொருள் நிறுவனம் ஒன்றினை தெரிவு செய்வதற்காக மாத்திரம் பெறுகை செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக முன்னேற்றத்தினை ஈட்டிக்கொள்ளப்படாதிருந்த மையினை அவதானிக்கப்பட்டது. | பெறுகை செயற்பாடுகள் ஊடாக Belvantage (Pvt) Ltd. நிறுவனத்தினை இம்முகாமைத்துவ தகவல் முறைமையினை கட்டியெழுப்புவதற்காக தெரிவு செய்யப்பட்டதுடன் அதன் முதற்கட்டத்தினை செயற்படுத்துவதற்காக ரூபா 1,980,000.00 தொகையினை Belvantage (Pvt) Ltd. நிறுவனத்திடம் பெற்றுக் கொடுக்கப்பட்டது. அதன் இரண்டாம் கட்ட வேலைகள் தற்போது சுமூகமாக முடிக்கப்பட்டு வருகின்றது. | எதிர்பார்க்கப்படும் குறிக்கோளினை அடையக்கூடிய வகையில் மற:றும் செயலாற்றலினை ஆகக்கூடியதாக பெற்றுக் கொள்ளும் வகையில் நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தல்பட வேண்டியமை. |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக திணைக்களத்தில் சிரேஷ்ட மட்டத்திலான 04 வெற்றிடங்கள் மூன்றாம் மட்டத்திலான 05 வெற்றிடங்கள், | இத்திணைக்களத்தில் 20 சிரேஷ்ட மட்டத்திலான பதவிகளுள் 16 பதவிகள் தற்போது நிரப்பப்பட்டுள்ளன. மூன்றாம் மட்டத்திலான 05 | திணைக்களத்தின் செயலாற்றலினை கவனத்திற் கொண்டு வெற்றிடங்களை |

| | | |
|---|---|---|
| இரண்டாம் மட்டத்திலான 26 வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப மட்டத்திலான 05 வெற்றிடங்கள் உள்ளிட்ட 40 மொத்த வெற்றிடங்கள் நிலவின. 04 பணிப்பாளர் வெற்றிடங்களும், உள்ளக கணக்காய்வு, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் மொழி பெயர்ப்பாளர் பதவிகளுக்கான தலா ஒரு வெற்றிடமும் நிலவியதுடன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான 15 வெற்றிடங்கள் மற்றும் 11 முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர் வெற்றிடங்கள் உள்ளிட்ட மொத்த ஊழியர் பற்றாக்குறையினை நிரப்புவதற்கு திணைக்களத்தினால் முடியாது இருந்தது. | பதவிகளின் வெற்றிடங்கள் நிரப்புவதற்கு இதுவரையிலும் முடியாது போய் உள்ளது. | நிரப்புவதற்கு துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |